**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

**GEO/S 2201 பொருளாதாரப் புவியியல்**

**நேரம் : 02 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து ஒரு வினாக்களை பகுதி – II இல் இருந்து இரண்டு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக மூன்று(03) வினாக்களுக்கு விடையளிக்குக.**

**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்**

---

## பகுதி – I

01. (i) பொருளாதாரப் புவியியல் என்றால் என்ன என்பதன்னை குறிப்பிட்டு அதன் பிரதான எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(06 புள்ளிகள்)

(ii) பொருளாதாரப் புவியியலின் உபபிரிவுகளைப் பெயரிட்டு, அப்பிரிவுகளின் உள்ளடக்கத்தினை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(iii) பொருளாதாரப் புவியியலின் முக்கியத்துவத்தினை விபரித்து, அதன் அண்மைக்காலப் போக்குகள் தொடர்பில் ஆராய்க.

(16 புள்ளிகள்)

02. (i) உலகின் பிரதான கைத்தொழில் பிரதேசங்களைக் குறிப்பிட்டு அவற்றில் உள்ளடங்கும் நாடுகளைப் பெயரிடுக.

(06 புள்ளிகள்)

(ii) உலகின் ஆரம்பகாலக் கைத்தொழில்களுக்கும், நவீன கைத் தொழில்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை சுருக்கமாக குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(iii) கைத்தொழிலின் அமைவிடத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளை விபரித்து, அக்காரணிகளின் முக்கியத்துவத்தில் கால ரீதியாக ஏற்பட்டுவரும் மாற்றங்களை ஆராய்க.

(16 புள்ளிகள்)

## பகுதி – II

03. உலகக் குடித்தொகை வளர்ச்சிப் போக்கின் தன்மையினை குடிவரையியல் நிலைமாறு கோட்பாட்டின் ஊடாக விபரிப்பதுடன் அதிகரித்துவரும் குடித்தொகை வளங்களின் மீது ஏற்படுத்திவரும் தாக்கங்களையும் ஆராய்க.

(35 புள்ளிகள்)

04. அபிவிருத்தி அடைந்து மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நகராக்கப் பண்புகளை விபரித்து துரித நகராக்கத்தினால் அந்நாடுகள் எதிர்நோக்கிவரும் சவால்களை உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

(35 புள்ளிகள்)

05. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறையில் ஏற்பட்டுவரும் நவீனத்துவங்களை விபரித்து, ஒரு நாட்டின் அபிவிருத்தியில் போக்குவரத்துத்துறை எத்தகைய பங்களிப்பினை கொண்டுள்ளது என ஆராய்க.

(35 புள்ளிகள்)